முருகப்பெருமான் துணை

**மகான் அழுகண்ணிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.05.2023, சனிக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
   ஞானச்சுடரே தேசிகா வாழ்க
   வானவர்கள் மெச்சும் வள்ளலாய்
   வரம்பெற்று வந்த குருராஜனே
2. அரசனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது தகர்திங்கள்
   வரமென மூவேழீர் திகதி காரி வாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 23 ம் நாள், 06.05.2023, சனிக்கிழமை)
   வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை அழுகண்ணிச்சித்தர் யானும்
   அருளுவேன் உலகோர் ஞானம்பெற
   ஆசிதனை குருமார்க்கம் வழி
   அனைவரும் ஏற்று வருக
4. வருகவே அவரவர் வாழ்விலும்
   வளரும் மெய்ஞான பலம்
   தரும பலமும் தயவும் பெருகி
   தன்னையே அறியும் தெளிவும் கூடி
5. கூடியே பிறவி நோக்கமும்
   குருவழித் தொடரும் வாய்ப்பும்
   தடையறக் கிட்டி இனிதே
   தரணியில் சர்வபலமும் அடைவர்
6. அடையவே அரங்கன் காட்டும்
   அறநெறி அகலா வண்ணம்
   சோடைபோகா வாழ்வு கண்டு
   சுருதிபடி எல்லா வளமும் காண்பர்
7. காண்கவே முருகப்பெருமானின்
   கருணைமிகுந்த வழிபாட்டை
   உண்மை ஞான வழிகளாக
   உலகோர் ஏற்று சரணாகதி

8. சரணாகதி அடைந்து செய்திட
சடாட்சர தீட்சை ஏற்று
சரணாகதி அரங்கன் மேல்
சகலரும் கொண்டு செயல்பட
9. செயல்பட அறியாமை விலகி
செப்பிடுவேன் ஞானத்தெளிவு
தயாபரன் குருவரங்களால்
தானாக வந்தடையும் என்பேன்
10. என்கவே இந்தபலம் வந்திட
எவ்வினையும் வென்று மீளும்
சண்முகனார் ஆசி அருள்
சகலருக்கும் துணையாக மாறி
11. மாறியே ஞானவான்களாக்கும்
மகத்துவம் உலகில் நடக்கும்
பாரதமெங்கிலும் ஞானவான்கள்படை
பரந்துவிரிந்து ஞானபூமியாகும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—